21.10.2019

3வது பக்கம்

1981 முதல்

பிற்பகல்

தமிழ் நாளிதழ்

# எம்.டி.சி.ஆர்.சி மரபணு பரிசோதனை பல்துறை மருத்துவ பராமரிப்பு மையம்

## ராயல்கேர் மருத்துவமனையில் துவக்கம்

**கோவை, அக். 21**

கோவை ராயல் கேர் மருத்துவமனையில் எம்.டி.சி.ஆர்.சி.நிறுவனம் மரபணு பரிசோதனை பராமரிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் பல்துறை மருத்துவமனை பராமரிப்பு மையத்தை தொடங்கியுள்ளது. அதை கோவை அரவிந்த் கண் மருத்துவமனை தலைவர் டாக்டர். கல்பனா நரேந்திரன் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். விழா வில் ராயல்கேர் சேர்மன் டாக்டர் மாதேஸ்வரன் மற்றும் பிரசன்ன குமார் பி.ஷிரோஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் எம்டிசி.ஆர்.சி தன்னார்வ தொண்டு நிறுவனர் முனைவர் லக்ஷ்மி வரவேற்புரை வழங்கி பேசியதாவது: உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுவதாக உலக புள்ளி விவரம் கூறுகிறது. ஆனால் உலகளவில் ஒப்பிட்டால், நம் தமிழகத்தில் அதிகளவில் இந்நோய் காணப்படுகிறது. இது அரிய வகை நோய் என வரையறுக்கப்பட்டாலும் இது ஒரு புறக்கணிக்கப்பட்ட அநாதை நோயாகும். இந் நோய் மரபு வழி வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண் டறிந்துள்ளனர். ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்நோய்க்கு மருந்து இன்றளவிலும் கண்டறியப்படவில்லை. நாம்



கற்ற அறிவியல், சமுதாயத்தை சென்றடைவதே இந்த அமைப்பின் நோக்கமாகும். டூஷீன் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களது குடும் பத்திற்காக இந்த நிறுவனம் சேவையாற்றி வருகிறது.

மேற்கண்டவாறு அவர் கூறினார்.